# உங்கள் இரத்தத்தில் உள்ள பிராணவாயுவை ($SpO_2$) அளவெடுப்பது எப்படி

உங்கள் இரத்தத்தில் எத்தனை விழுக்காடு பிராணவாயு இருக்கிறது என்பதை $SpO_2$ காட்டுகிறது. $SpO_2$ பற்றி மேல்விவரம் அறிய, stepschallenge.gov.sg இணையப்பக்கத்தை நாடவும்

## ‘$SpO_2$ அளவெடுப்பைச்’ செயல்படுத்துவது எப்படி




### படிநிலை 1

இரத்தப் பிராணவாயு திரை தெரியும்வரை HPB உடற்பயிற்சி ட்ராக்கரின் தொட்டுணர் விசையைத் தட்டவும். ‘Blood Oxygen’ அளவெடுப்பைச் செயல்படுத்த அழுத்திப் பிடித்திருக்கவும்.







### படிநிலை 2

உங்களது $SpO_2$ அளவு, 3 விநாடிக்குப் பிறகு அளவெடுக்கப்படும். துல்லியமான அளவைப் பெற, நீங்கள் அசையாமல் உட்கார்ந்தபடி இருப்பது நல்லது.




### அளவெடுக்கவில்லையா?

மறுபடியும் தட்டிப் பார்க்கவும். சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தின் திரை மேல்நோக்கியபடி, சரியான முறையில் மணிக்கட்டில் அணியப்பட்டிருப்பதையும் உறுதி செய்யவும். படிநிலைகள் 1, 2 ஆகியவற்றை மீண்டும் செய்யவும்.

## சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனம் $SpO_2$ அளவை எப்படி அளவெடுக்கிறது ?

சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனம் $SpO_2$ அளவெடுப்பதற்கு ஒளியுணர் கருவியைப் பயன்படுத்துகிறது. சருமத்தின் ஊடே பாய்ச்சப்படும் ஒளியிலிருந்து பிரதிபலிப்பாகும் ஒளியின் அளவைக் கொண்டு, இரத்தத்தில் இருக்கும் பிராணவாயுவின் அளவை கருவி கணக்கிடுகிறது.

குறிப்பு: சுகாதார மேம்பாட்டு வாரிய உடலுறுதிக் கண்காணிப்புச் சாதனத்தில் தெரியும் $SpO_2$ அளவை மருத்துவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. உங்களது அளவுகள் உங்களுக்குக் கவலையளித்தால், தயவுசெய்து மருத்துவரிடம் ஆலோசனை பெறவும்.